அறுவடைத் திருநாள்:
வாழ்வின் கொண்டாட்டம்
'CELEBRATING LIFE'

Key Text: உபாகமம் 26:1-15



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் இவ்வறுவடைத் திருநாளிலே உங்கள் அனைவரையும் வாழ்த்துவதிலே மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அறுவடைத் திருநாள் என்றாலே நமது மனதில் மகிழ்சியும், இன்பமும் காணப்படும். ஏனெனில் இவ்விழாவின் போது தான் திருச்சபையில் மக்கள் ஒருவரோடு ஒருவர் தங்களை ஐக்கியப்படுத்தி கொள்கின்றனர், பொருட்கள் விற்பதிலும் வாங்குவதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். மேலும் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு தங்கள் பங்களிப்பை சபைக்கு அளிக்கின்றனர். ஆனால் இதை மட்டுமே முதன்மையானதாக நாம் எடுத்துக் கொள்ளாமல் இந்த வருடம் அறுவடைத் திருநாளின் மகிழ்ச்சி என்பதை நம் வாழ்வின் கொண்டாட்டமாக இருக்கவேண்டும் என்று நாம் தீர்மானிக்க வேண்டும், ஏனெனில் அறுவடைத் திருநாள் என்பது நாம் ஆண்டவரிடம் கொண்டுள்ள விசுவாசத்தையும், உறவையும் அவருக்கு நன்றி செலுத்துவதின் வழியாக வெளிப்படுத்துவதாகும். எனவே பொருள் உணர்ந்தவர்களாய் நம் மகிழ்வை வெளிப்படுத்த கடவுள் விரும்புகிறார்.

இஸ்ரயேல் மக்கள் ஒவ்வொறு ஆண்டும் மூன்று மிகப்பெரிய விழாக்களைக் கொண்டாடுவார்கள். அவைகள்

- **பாஸ்கா திருவிழா**
- **கூடார திருவிழா,**
- **அறுவடை (அர்ப்பின்) திருவிழா**

அதில் மிகவும் முக்கியமான விழா அறுவடை திருவிழாப் பண்டிகையாகும். இவ்விழாவை மழைக்காகவும், செழுமைக்கு காரணர் கடவுளே என்பதை நினைவுக் கூறவும் இஸ்ரயேல் மக்கள் கொண்டாடினர். இவ்விழாவில் முதற்பலன்களைக் கடவுளுக்கு படைப்பது முக்கிய இடம் பெற்றது. தொடக்கத்தில் இஸ்ரயேல் மக்கள் ஒரு நாள் மட்டும் தான் இதை அனுசரித்து வந்தனர், சிறையிருப்பின் காலத்திலிருந்து இப்பண்டிகையை இரண்டு நாட்களாக கொண்டாடினர். அதனையே கிறிஸ்தவர்களாகிய நாம் நன்றி கூறும் விழாவாக கொண்டாடி வருகிறோம். இவ்விழாவை அறுவடை விழா, அறுப்பு விழா, வார விழா, முதல் விளைச்சல் விழா மற்றும் பெந்தேகொஸ்தே விழா (ஐம்பதாவது நாள்) என்று பல பெயர்களைக் கொண்டு அழைப்பார்கள்.

இஸ்ரயேல் மக்கள் கானான் நாட்டில் நுழைந்த பின் அங்கு மிகவும் செழுமையாக வாழ்ந்தார்கள், அப்பொழுது அறுவடை விழாவை கொண்டாடினர்,(உபாகமம் 26:1-15) வசனங்களில் படிக்கிறோம். மேலும் இஸ்ரயேல் மக்கள் தங்களிடம் இருந்த பொருள்களை கடவுளுக்கு கொடுத்து மாட்சிமைப் படுத்துவை விளக்குகிறது.

1.வாழ்வின் கொண்டாட்டம் ஆண்டவருக்கு கொடுப்பது 26:1-4

இஸ்ரயேல் மக்கள் கானான் நாட்டில் வாழந்தபோது அவர்கள் அங்கு உள்ள நிலத்தைப பன்படுத்தி அதில் விளைந்த முதற்பலனை கொண்டுபோய் குருக்களிடம் கொடுத்தார்கள் அதை அவர்கள்

ஆண்டவரின் பலிபீடத்தில் வைத்து ஆண்டவரை மாட்சி படுத்தினார்கள்.எனவே உள்ள தூய மனதையும், பொருள்களைக் கொடுத்து இறைவனை மகிமைப்படுத்துவது சிறந்தது.

2.வாழ்வின் கொண்டாட்டம் ஆண்டவரிடம் வருவது 26:5-9

இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரிடம் வரும்பொழுது தனது பழைய வாழ்க்கையை நினைத்து பார்த்தார்கள். தங்களை ஆண்டவர் கடந்த காலத்தில் எவ்வாறு விடுதலையாகிக் கொண்டுவந்தார் என்பதை நினைவுக் கூர்ந்து அதன் வழியே தனது உறவை புதிப்பிதுக் கொண்டார்கள். எனவே ஆண்டவரிடம் வரும்போது நமது விசுவாசத்தையும் உறவையும் புதுப்பித்துக் கொள்ளும் விழாவாக இருக்க வேண்டும்.

3. வாழ்வின் கொண்டாட்டம் அருட்பணிக்கு உதவுவது 26:10-13

இஸ்ரயேல் மக்கள் முதற்பலனை கொடுத்ததனால் அங்கு உள்ள லேவியர்கள், அன்னியர்கள், ஏழைகளுக்கு உதவியாக இருந்தது. எனவே தன்னிடம் உள்ளதைப் பகிர்ந்து வாழும் தன்மை அதனாலே வெளிப்பட்டது. நாம் கொடுக்கும் அனைத்து உதவிகளும் இறையரசை நிறுவும் அருட்பணிக்கு உதவியாக் இருக்கவேண்டும்

4. வாழ்வின் கொண்டாட்டம் ஆசீர்வாதங்களை பெறுவது 26:14-15

இஸ்ரயேல் மக்கள் ஆண்டவருக்கு கொடுத்து கீழ்ப்படிந்ததால் பாலும் தேனும் வழிந்துதோடும் நாட்டைச் சுதந்திரமாக்கி கொண்டார்கள் பல நன்மைகளையும் நிறைவான வாழ்வையும் பெற்றுக்கொண்டார்கள். எனவே நாம் கொடுப்பதால் பல்வேறு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு வாழமுடியும்.

நிறைவாக:

இன்றைய காலங்களில் திருவசனத்தையும்,விசுவாசத்தையும் மறந்து பணத்தை மையமாக வைத்து தான் விழா கொண்டடுகிறோம். ஆனால் ஆத்துமாகளை அறுவடை செய்யும் பணியாக அறுவடை திருநாள் பண்டிக்கை இருப்பதே இயேசு கிறிஸ்துவின் விருப்பமாக உள்ளது.

Bro. K. K. David
Design and Layout: Rev. Silvan Chandrakumar A.